Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பள்ளு இலக்கியங்களில் ஆடல் கூறுகள்

16

**கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்**
**சிரேஷ்ட விரிவுரையாளர் (நடனத்துறை)**
**சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**ஆய்வுச் சுருக்கம்**

சிற்றிலக்கிய வகைகளில் எளிமையும் இனிமையும் வாய்ந்த ஓர் இலக்கியம் பள்ளு இலக்கியமாகும். பள்ளர்களின் வாழ்க்கையை விளக்கிக் கூறும் இலக்கியம் ஆதலால் இதற்குப் பள்ளு என்ற பெயர் ஏற்பட்டது. உழவுத் தொழில் செய்யும் மக்கள் பள்ளர்கள் ஆவர். இவர்களில் பெண்கள் பள்ளியர், பள்ளத்தியர் என அழைக்கப்படுவர். எனவே, வயல்களில் உழவுத் தொழில் செய்யும் மக்களின் வாழ்க்கையைப் பாடும் இலக்கியம் பள்ளு இலக்கியமாகும். சிலம்பு காட்டிய பதினொரு ஆடல்களில் உள்ள கடைசியர் ஆட்டம் இதுவாகும். இந்திரனின் மனைவி அயிராணி ஆடிய ஆட்டமென சிலம்பு கூறுகின்றது. பள்ளு எனும் இலக்கியத்தில் பள்ளர் வாழ்க்கை முறையானது நில வளம், மழையைப் போற்றல் போன்றவை, நிலத்தின் தலைவனான பள்ளனின் வருகை அவனது இரு மனைவியர் வருகை, இவ்விருவரும் ஒருவரை ஒருவர் ஏசிக் கொள்ளுதல் என்பன எல்லாம் நடனத்தின் உறுப்புகளாக அமையும்.

பள்ளு எனும் நடன நாடகத்தில் உழவர்களின் ஆடை அணிகலன்கள் என்பன ஆஹார்யமாகவும், உழவர் மக்களின் உரையாடல் வாச்சிகமாகவும், பள்ளியர் இருவரின் பேச்சு மொழிகள் நிந்தாஸ்துதியாகவும், உழவ மக்களின் கிராமிய இசைப் பாடல்களும், அப்பாடல்களுக்கு உறுதுணையாக இருக்கும் வாத்தியக் கருவிகளும் நடன நாடகத்திற்கு ஏற்புடையதாக அமையும். அந்தவகையில் ஈழத்தில் எழுந்த பள்ளு இலக்கியங்களான கதிரமலைப்பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு, ஞானப்பள்ளு, தண்டிகை கனகராயன் பள்ளு போன்றவற்றில் வெளிப்படுத்தப்படும் ஆடல் கூறுகளை ஆராய்ந்து கூறுவதை இவ் ஆய்வுக் கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

திறவுச் சொற்கள் - பள்ளு, ரஸம், பொலி, குரவை, சேரி மொழி

**முன்னுரை**

சிற்றிலக்கிய வகைகளில் எளிமையும் இனிமையும் வாய்ந்த ஓர் இலக்கியம் பள்ளு இலக்கியமாகும். பள்ளர்களின் வாழ்க்கையை விளக்கிக் கூறும் இலக்கியம் ஆதலால் இதற்குப் பள்ளு என்ற பெயர் ஏற்பட்டது. உழவுத் தொழில் செய்யும் மக்கள் பள்ளர்கள் ஆவர். இவர்களில் பெண்கள் பள்ளியர், பள்ளத்தியர் என அழைக்கப்படுவர். எனவே, வயல்களில் உழவுத் தொழில் செய்யும் மக்களின் வாழ்க்கையைப் பாடும் இலக்கியம் பள்ளு இலக்கியமாகும்.

சிலம்பு காட்டிய பதினொரு ஆடல்களில் உள்ள கடைசியர் ஆட்டம் இதுவாகும். இந்திரனின் மனைவி அயிராணி ஆடிய ஆட்டமென சிலம்பு கூறுகின்றது. பள்ளு எனும் இலக்கியத்தில் பள்ளர் வாழ்க்கை முறையானது நில வளம், மழையைப் போற்றல் போன்றவை, நிலத்தின் தலைவனான பள்ளனின் வருகை அவனது இரு மனைவியர் வருகை, இவ்விருவரும் ஒருவரை ஒருவர் ஏசிக் கொள்ளுதல்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

என்பன எல்லாம் நடனத்தின் உறுப்புகளாக அமையும்.

**ஈழத்து பள்ளு இலக்கியங்களில் வெளிப்படுத்தப்படும் ஆடல் கூறுகள்**

பள்ளு எனும் நடன நாடகத்தில் உழவர்களின் ஆடை அணிகலன்கள் என்பன ஆஹார்யமாகவும், உழவர் மக்களின் உரையாடல் வாச்சிகமாகவும், பள்ளியர் இருவரின் பேச்சு மொழிகள் நிந்தாஸ்துதியாகவும், உழவ மக்களின் கிராமிய இசைப் பாடல்களும், அப்பாடல்களுக்கு உறுதுணையாக இருக்கும் வாத்தியக் கருவிகளும் நடன நாடகத்திற்கு ஏற்புடையதாக அமையும். அந்தவகையில் ஈழத்தில் எழுந்த பள்ளு இலக்கியங்களான கதிரமலைப்பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு, ஞானப்பள்ளு, தண்டிகை கனகராயன் பள்ளு போன்றவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆடல் கூறுகள் இங்கு வெளிக்கொணரப்படுகிறது. கதிரமலைப் பள்ளுவில் ஆடல் கூறுகள் யாழ்ப்பாண மன்னர் காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களில் ஒன்றாகிய நாடகப்பாங்கு வாய்ந்த சிற்றிலக்கியமாக கதிரமலைப் பள்ளு விளங்குகிறது. கதிரமலை மீது பாடப்பட்ட எந்த இலக்கியமும் பள்ளன், பள்ளி வாழ்க்கைப் போக்கை ஒட்டியதாக அமைகிறது. பள்ளன், பள்ளி ஆகியோரின் உறவு நிலையில் சிருங்காரப் பண்புடன் பாடப்பட்டிருக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஆடலில் அடிப்படை நயங்களில் ஒன்றாகிய சிருங்கார ரஸம் கதிரமலைப் பள்ளுவில் செறிவாக இடம்பெற்றுள்ளது. பள்ளுகள் அனைத்தும் உழவர்களுடைய வாழ்க்கையைச் சித்தரித்துக் கூறுவனவாக அமைகின்றன. அந்தவகையில் கதிரமலைப் பள்ளும் இயல், இசை, நாடகம் மூன்றும் கலந்த கிராமிய இசை நாடக மரபில் பாடல் இடம்பெற்று ஆடல் செய்திகள் இடம்பெற்றிருப்பதையும் நோக்க முடிகிறது. ஈழத்துப் பள்ளர் சாதியினரால் சுவை ததும்பும் வகையில் இப் பள்ளு அமைகிறது. மகாவலிகங்கைப் பண்ணைக்காரன் வயலில் பள்ளியர் நாற்று நடல், சூடு வைத்தல், பொலி அளத்தல், அருவி வெட்டல் போன்ற வேலைகளைச் செய்கின்ற பாத்திரங்களாக படைக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்கள் வயலில் வேலை செய்யும் பொழுது முருகனின் பெருமை, பண்ணைக்காரன் பெருமை, பள்ளன் பெருமைகளை சேரி மொழி கலந்த பாடல்களாகப் பாடி மகிழ்கின்றனர். அப்பொழுது பெண்கள் ஒன்றாகக் கூடி கும்மி அடித்தும், முழவு, பறை, தண்ணுமை ஆகிய வாத்தியங்களின் தாளங்களோடு அசைந்து துள்ளித்திரிந்து நாற்று நடல் பாடல்களைப் பாடி ஆடுகின்றனர். பள்ளிகள் கதிரமலை முருகனின் பெருமையைக் கூறி ஆடிப் பாடுகின்றார்கள். மார்பைப் பிளந்த திருமாலின் மருமகன் என்றும், குறத்தியான வள்ளியின் கணவன் கதிரமலை முருகன் மயிலில் ஏறி வருகின்றான் அந்த அழகினைப் பாருங்கள் பள்ளீரே என்று வயலில் நெல் விதைக்கும் போது பெண்கள் குரவையிட்டு காலில் அணிந்த சிலம்புகள் அசைய நெளிந்து வளைந்து குனிந்து பாடி ஆடினார்கள்.

**“மயிலி லேறி வருமு தாரன்**
**மாரனுக்கு நல் மைத்துன்ன**
**வாசக் குதிரை மலையில் வேலன்**
**சிலம்பு புலம்ப வோடி கூடிக் குரவையிட்டு**
**செவ்வையாக நாற்று நடுகையிலே”**

எனும் பாடல் எடுத்துக்காட்டாக அமைகிறது.

மேலும் பள்ளியர் வயலில் ஆடல் பாடல்களை நிகழ்த்தி தங்களுடைய எண்ணங்களை வெளிக்கொணர்ந்தார்கள். இவர்கள் பாமர மக்களாகவும், படிப்பறிவு இல்லாதவர்களாகவும் காணப்படுகின்றார்கள். வயலில் ஒன்றாகச் சேர்ந்து வேலைகள் செய்யும்பொழுது தம்முடைய கலை உணர்ச்சிகளை சேரி மொழி அதாவது, நாட்டுப்புறச் சொற்கள் கலந்த இசை, நாடகம், வசை, ஆடல்

என்பவற்றை ஆடிப்பாடி நடித்தும் காட்டுகின்றார்கள். இவர்கள் தாளங்கள் கொண்ட வாத்தியங்களோடு வயலில் துள்ளிக் குதித்து தங்களுடைய உடலினை அதற்கேற்றவாறு நெளித்து வளைத்து பாடலோடு ஆடலையும் நிகழ்த்துகிறார்கள் என்பது கதிரமலைப் பள்ளிலக்கியம் மூலம் புலனாகிறது. இப்பள்ளிலே ஒரு சில இடங்களில் அயோக சிருங்காரம் புலப்படுகின்றது. பள்ளியானவள் வயற் செய்கையின் போது வேலை செய்யும் அவளைப் பார்த்து பள்ளனானவன் காதல் கொள்கின்றான். பள்ளியானவள் சிலம்பு ஓசை எழுப்ப சிரிப்பிலே புருவம் சுருங்க நாற்றை ஒழுங்காக நடுகையில் அவளுடைய காதில் தோடு ஆட அவளுடைய சின்னச் சிரிப்பிலே பள்ளனானவன் தயங்கி நிற்கின்றான் என்றும், பள்ளன் அவள்மேல் அன்பு கொண்டும் அவளை நோக்கிப் பார்க்கின்றான் என்றும் கூறப்படுகிறது. கங்கை வயலிலே இனிய சர்க்கரை போன்ற சொற்களைப் பேசுகின்ற நற்குணமுடைய பெண்கள் கூடி எவ்வித குற்றமுமில்லாமல் நெற்பயிரை நடும்போது அவர்களுடைய சின்ன இடை அசைய கருங்கூந்தலில் வண்டுகள் ஆர்ப்பது பாருமென அவர்களுடைய மையல்கொள்ளத்தக்க தோற்றத்தைக் கூறுகின்றார்கள். இவை இப்பள்ளில் காணப்படும் அயோக சிருங்காரம் புலப்படும் அகத்துறைசார் விடயங்கள் ஆகும்.

**“சேரத்த திரண்டு நிரைத்துப் பரந்து**
**சிரித்தும் புருவம் நெரித்துக்காற்**
**தகைப் பிலேசின்னச் சிரிப்பிலே பள்ளன்**
**தயங்கி நானடி பள்ளீரே”**

எனும் பாடல் எடுத்துக்காட்டாக அமைகிறது.

கதிரமலைப் பள்ளு சிதைவின்றி கிடைக்கப்பெறினும் இதில் அகப்பொருட்டுரை கூறும் பாடல்கள் குறைவாகவே உள்ளன. அகப்பொருட்டுரைப் பாடல்கள் பள்ளில் அமையவேண்டும் என்ற விதிக்கு முன்னர் எழுந்த நூலாக இந்நூல் அமைந்திருக்கலாம். இப்பள்ளிலே சிருங்கார ரஸத்தின் உட்பிரிவுகளான அயோக சிருங்காரம், விப்ரயோக சிருங்காரம், சம்யோக சிருங்காரம் போன்றன இடம்பெற்றுள்ளன.

**<u>பறாளை விநாயகர் பள்ளுவில் ஆடற் கூறுகள்</u>**

விநாயகரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு தோற்றம் பெற்ற ஈழத்துப் பள்ளு இலக்கியத்தில் பறாளை விநாயகர் பள்ளும் ஒன்றாகும். இப்பள்ளுவில் அயோக சிருங்காரம் ஒரு சில இடங்களில் புலப்படுகிறது. தலைவியினுடைய சிறப்புக்களைத் தலைவன் பாராட்டுகின்றான். அவன் பாராட்டும்போது தலைவியினுடைய அழகை வியந்துரைக்கின்றான். நஞ்சிருக்கும் உமது கண்கள் வேல் போன்றதுவோ, நகைக்கும் அழகிய முகம் குளிர்ச்சி பொருந்திய சந்திரனைப் போன்றதுவோ, கருமையாக கூந்தல் கார்காலத்து மேகம் போன்றதுவோ, பழத்தை ஒத்த உதடுகள் நிலையில் பிறந்த பவளமோ என்று தலைவன் அவளுடைய அழகை வியந்துரைக்கிறான்.

**நஞ்சுபழ கியவுமது கண்கள் வேலோ**
**நகைவதனங் குளிர்மதியோ நகைத்தன் கேலறை**
**அஞ்சனவார் குழல் பருவ மஞ்சோ வேலை**

எனும் பாடல் எடுத்துக்காட்டாக அமைகிறது.

இவ்வாறே தான் பறாளை விநாயகர் பள்ளில் ஈழ மண்டலப் பள்ளியாக மூத்த பள்ளியும், சோழ மண்டலப் பள்ளியாக இளைய பள்ளியும் அமையப்பெற்றுள்ளனர். பள்ளியர்க்கிடையில் இங்கும் விப்ரயோக சிருங்காரம் காணப்படுகின்றது. இதில் மூத்த பள்ளி அவனை விட்டுப் பிரிந்தே தான்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

இருக்கிறாள். பறாளை விநாயகர் பள்ளிலும் மற்றைய பள்ளு நூல்களைப் போல் கதையம்சம் காணப்பட்டாலும் அவ் உணர்வுகளைக் கூறும் விதம் வேறுபட்டதாகும். மேலும் பறாளை விநாயகர் பள்ளில் பள்ளன் பள்ளியருக்கிடையே சம்யோக சிருங்காரம் காணப்படுகின்றது. பள்ளன் பள்ளியர்க்கு வார்த்தைகள் மூலம் ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள அன்பு அன்னியோன்ய நிலை போன்றன கூறப்படுகின்றது. இதில் இளையவளுடன் தான் பள்ளன் ஒன்று சேர்ந்திருக்கின்றான். முற்றும் இப்பள்ளில் வரும் வேறு கதாபாத்திரங்களில் இறைவன் இறைவியருக்கிடையிலான சம்யோக சிருங்காரம் புலப்படும் விதமும் கூறப்படுகிறது. இதில் விநாயகருடைய தோற்றத்தைக் கூறுவதாக அமைவதோடு சிவபெருமானுக்கும் உமாதேவிக்கும் நடைபெற்ற திருமண நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது. எண்ணிக்கையே இல்லாத கோடிக்கணக்கான உருத்திரர் சூழ, பன்னிரு சூரியர்கள் சூழ, பூதகணங்கள் நெருங்க, ஆதிவிசேடனாகிய ஆயிரம் படமுடிகளையுடையவனான பணகண கூவிச்சேடன் சூழ, சித்தர்கள் சூழ்ந்திட, நாரதன் யாழிசைக்க, பாணாசுரன் குடமுழக்க, பூதகணத் தலைவனில் ஒருவனான பானுகம்சனும் குடமுழக்க, சரஸ்வதி, லக்குமி இசைக்க, உமாதேவி சிவனருகில் வந்து நிற்க மூன்று அழகிய ரேகை கொண்ட மங்கள நாணை சிவன் உமாதேவி கழுத்தில் கட்டி, இமைய அரசர் நீர் வார்க்க மலையரசன் பெற்ற உமையவளைக் கரம்பிடித்தான். இதில் பள்ளன் பள்ளியருடைய காதலைக் கூறாது இறைவனாகிய சிவன் உமையின் திருமண வைபவம் கூறப்பட்டுள்ளது. மனிதர்கள் மட்டுமல்ல இறைவனுக்குள்ளும் காதல், அன்பு காணப்படுகிறது. இவர்களுக்கும் சம்யோக சிருங்காரம் உண்டு என்பதை பின்வரும் பாடல் விளக்குகிறது.

**"தேரு நாமகள் சீர்த்தி யிசைக்க**
**திரும டந்தைநன் சோடியு மாக...**
**யிமய ராசன் புனல்வார்ப்ப மால்வரை**
**யீன்ற பாவை தனைக்கைப் பிடித்து"**

சிவன் உமை மணம் செய்துகொண்ட பிறகு கைலாயத்தில் யானை ஒன்றும் கூடி விளையாடும் புணர்ச்சியைக் கண்ட நிலையில் சக்தியும் சிவமும் பிடியும் களிறுமாக உருமாறிப் புணர்ந்தனர் என்றும், இப்புணர்ச்சியால் விநாயகப் பெருமான் யானை முகத்துடன் தோன்றினார் என்றும் கூறப்படுகிறது. இப்பள்ளில் சிவன் உமையின் அன்பு, காதல் என்பன அழகாக சித்தரிக்கப்படுகிறது. பள்ளன் பள்ளியரை மட்டுமல்ல இறைவனையும் இங்கு பாட்டுடைத் தலைவனாகக் கொள்ளப்பட்ட ரஸ வெளிப்பாடு இடம்பெற்றிருக்கிறது.

**<u>ஞானப் பள்ளுவில் ஆடற் கூறுகள்</u>**

ஞானப்பள்ளு இயேசுநாதரை விதந்து பாடும் பள்ளு நூலாக அமைகிறது. இதனை ஞானம் நிறைந்த பள்ளு என்று அழைப்பர். பள்ளினுடைய இலக்கணங்கள் இதில் சிறப்பாகக் காணப்படுகின்றது. இப்பள்ளிலும் வயல் வேலை செய்யும் பள்ளியர் ஆடியும் பாடியும் மகிழ்ந்து உரையாடும் இசைப்பாங்கு கொண்டதாகக் காணப்படுகின்றது. ஆனால் இப்பள்ளில் பள்ளியர் ஈழநாட்டுப் பெருமையைக் கூறாது உரோமாபுரி நகர் வர்ணனைகளைக் கூறும் முகமாக அமைந்துள்ளது. இப்பள்ளிலும் மூத்தபள்ளி, இளையபள்ளி, பள்ளன், பண்ணைக்காரன் என நான்கு பாத்திரங்களைக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. சிந்துநடைப் பாடல்கள் விரவி நடைமுறை சேரி மொழி கலந்து இப்பள்ளுப்

பாடல்கள் ஏனைய பள்ளுகள் போல் இலக்கணங்களைக் கொண்டுள்ளது. பள்ளர் சாதியினரான பள்ளியர்கள் பண்ணைக்காரன் வயலில் வேலை செய்யும் பொழுது பேச்சுவழக்கு சொற்கள் மிகுந்து மற்றவர்களைக் கவரக்கூடிய விதத்திலும் மனதிற்கு இன்பத்தை அளிக்கும் வண்ணம் கிராமிய இசைச் சொற்கள் நிரம்பிய பாடல்களைப் பெண்கள் பாடி நாற்று நடும்போது அங்கு ஆடல் இடம்பெற்றிருக்கிறது.

**"தந்தநன தந்தன நந்தநன.**

**காரணன் புகளைப் பாடியாடிக் கலந்து நாற்று நடுகச்சே"**

மேலும் வயலில் நெல் அறுவடை செய்யும்பொழுது பள்ளியர்கள் ஒன்றாகச் சேர்ந்து காலிலுள்ள சிலம்புகள் புலம்ப பறை, தப்பட்டி, தண்ணுமைத் தாளங்கள் முழங்க அருவி வெட்டுப் பாடலைப் பாடி நடனம் புரிந்து மகிழ்ந்தனர். இதனைப் பின்வரும் பாடலடிகள் மூலம் காணலாம்.

**"கர்த்தன் முன்னாளிலே**

**தனந்தனந்தன வெனும் பல சிலம்பொரு**

**தத்திமி தத்திமி தேவன கைதிரட்டே**

**சதங்கை தண்டைகள் அலம்பிட நடம்புரி"**

இவ்வாறு வயலில் அறுவடை முடிந்த பின்னர் பள்ளியர் கர்த்தர் முன்னிலையில் வேண்டி பொங்கல் வைத்து தாங்கள் வயலில் செய்த செயல்களைப் பாவனை செய்து ஆடிப்பாடி மகிழ்வார்கள். நாற்று நடுதலின்போது ஆடல் இடம்பெற்றிருப்பது, ஆடலால் கருவளப் பெருக்கை ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கையின் பொருட்டே வயலில ஆடப்டுகின்றது.

**<u>தண்டிகை கனகராயன் பள்ளுவில் ஆடல் கூறுகள்</u>**

பள்ளு இலக்கணங்களுக்கு அமைந்த ஈழத்துப் பள்ளு நூல்களில் தண்டிகை கனகராயன் பள்ளும் காணப்படுகிறது. இப்பள்ளிலும் பள்ளன், மூத்தபள்ளி, இளையபள்ளி, பண்ணைக்காரன் போன்ற பாத்திரங்கள் படைக்கப்பட்டு தண்டிகை கனகராயன் முதலியாரின் பெருமையை பள்ளியர் எடுத்தியம்புவதாக அமைந்துள்ளது. பள்ளியர் புலம்பல். ஒருவரை ஒருவர் ஏசுதல் போன்றவற்றில் சுவைமிக்கப் பேச்சு வழக்கு சொற்கள் காணப்படுகின்றன. இப்பள்ளு இலக்கியத்திலும் நாற்று நடுகையில் ஆடல் பற்றிய குறிப்புக்கள் சொல்லப்பட்டுள்ளன.

**"கனத் தனத்தி யனத் தினடைச்சி கந்தி சந்தி சந்திதாக**

**யசைந்து தசைந்து நகை தூங்க லாடிக்கூடி நடுகையிலே…"**

பொதுவாக எல்லாப் பள்ளுகளிலும் கூறப்பட்ட பாடல் வரிகள் உழவுத் தொழிலை அடிப்படையாக வைத்தே பாடப்பட்டுள்ளன என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆடல் உற்பத்தியையும் கருவளத்தையும் பெருக்கலாம் என்ற நம்பிக்கை உழவர்களிடத்திலே காணப்படுகிறது. இதனால் நாற்று நடுதல், அருவி வெட்டுதல் போன்ற உழவர் நடனங்கள் இப்பள்ளுவில் இடம்பெற்றிருப்பதை அவதானிக் முடிகிறது. பாமர மக்களாகக் காணப்படும் பள்ளர் இனச் சாதியினரால் வயலில் நிகழ்த்தப்படும் சிந்துநடைப் பாடல்களின் மூலம் தொழில்கள் நடனங்களான உழவர் நடனம் ஆடப்பட்டிருக்கின்றன.

**<u>முடிவுரை</u>**

யாழ்ப்பாண மன்னர்கால சிற்றிலக்கியமான கதிரமலைப் பள்ளுவில் ஆடல் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. அதாவது இப்பள்ளில் பள்ளர்கள் அருவி வெட்டும் வேலைகளின் போது முருகப் பெருமானின் பெருமைகளைப் பாடி முழவு, பறை, தண்ணுமை போன்ற வாத்தியங்கள் இசைக்க

ஆடியதாகக் கூறப்பட்டுள்ளது. இதிலே பள்ளன், பள்ளியர் இடையிலான சிருங்கார ரஸ வெளிப்பாடும் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். தொடர்ந்து பறாளை விநாயகர் பள்ளுவில் பள்ளன், பள்ளியர் இடையிலான சிருங்காரரஸத் தன்மை அழகாக இடம்பெற்றுள்ளதுடன் ஞானப்பள்ளுவில் இயேசுநாதரை விதந்து பாடி ஆடியுள்ளனர். மேலும் தண்டிகை கனகராயன் பள்ளுவில் பள்ளன் பள்ளியர்கள் நாற்று நடுகையின்போது ஆடிப்பாடியதாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு ஈழத்துப் பள்ளு இலக்கியங்களின் ஊடாக போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்தில் ஆடற்கலை முக்கியத்தும் பெற்றிருந்திருக்கின்றது என்பதை அவதானிக்க முடிகிறது.

**உசாத்துணை நூல்கள்**

01. இரகுராமன்.சே, தமிழர் நடன வரலாறு, நந்தினி பதிப்பகம், சென்னை
02. குமாரசுவாமி.வ, கதிரமலைப்பள்ளு, யுனி ஆர்ட்ஸ், கொழும்பு, 1996
03. சதாசிவம், ஞானப்பள்ளு, முதற்பதிப்பு, 1968
04. சிவத்தம்பி.கா, ஈழத்துத் தமிழ் இலக்கியம், நாவல் நூற்றாண்டு நினைவு வெளியீடு, 1978
05. யாழ்ப்பாண நல்லூர் சின்னத்தம்பிப் புலவர், பறாளை விநாயகர் பள்ளு, சென்னை, 1889.